பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 02

வியாழக்கிழமை
28 நவம்பர் 2024

கார்த்திகை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## பாம்பு கடித்து இளைஞர் பலி


வவுனியா, நவ. 28
வவுனியா வடக்கு, நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் நேற்றுக் காலை பாம்பு தீண்டியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பாம்புக்கடிக்கு ☞11

## பருத்தித்துறை துறைமுகத்துக்கு செல்வதற்குத் தடை!

யாழ்ப்பாணம், நவ. 28
புயல் காரணமாக பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணம் உள்ளிட்ட பல இடங்களில் பலத்த காற்றுடன் கன ☞11

## பூசகரைத் தாக்கிவிட்டு ஆலயத்தில் கொள்ளை

யாழ்ப்பாணம், நவ. 28
கைதடி கௌரி அம்மன் ஆலயத்துக்குள் புகுந்த கொள்ளையர்கள், பூசகரைத் தாக்கிவிட்டு அங்கிருந்த பணம் மற்றும் நகை என்பவற்றைக் கொள்ளையிட்டுச் ☞11



வெள்ளப் பேரிடருக்கு மத்தியிலும்

# கல்லறை மேனியருக்கு கண்ணீர்க் காணிக்கை!

அலையலையாக மக்கள் வெள்ளம்
தாயகம் எங்கும் சுடர்விட்டன தீபங்கள்

கிளிநொச்சி, நவம்பர் 28
தாயகக் கனவுடன் வித்தாகிப்போன மாவீரர்களை, தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு கொட்டும் மழைக்கு மத்தியிலும் கண்ணீர் மல்க அஞ்சலித்தனர். ☞11

## நாடாளுமன்றில் வீடியோ தடை

» 05

போர்க்குற்றம்

## சீனாவே நீதிக்குத் தடை

» 06

தாண்டவமாடுகின்றது பெங்கால்

## வெள்ளத்தால் 150,000 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவம்பர் 28
இலங்கைக்கு அருகாக நகர்ந்தபடி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள பெங்கால் புயலால், வடக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் நேரடிப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். ☞11

## தீவகக் கர்ப்பிணிகள் யாழ்ப்பாண நகரில்!

முன்னெச்சரிக்கை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 28
தீவகத்தில்உள்ளகர்ப்பிணிப்பெண்கள்முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அருகாக உள்ள பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ☞11

## மூன்று நாள்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள் இருப்பில்

யாழ்ப்பாணம், நவ. 28
ஏ-9 பாதை துண்டிக்கப்பட்டாலும், வடக்கு மாகாணத்துக்கு அடுத்த மூன்று நாள்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் இருப்பில் உள்ளதாக வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புயல் மற்றும் வெள்ளப் பேரிடர் காரணமாக, ஏ-9 வீதி பல இடங்களில் ☞11



முச்சந்தி முனி

'மழை கூட மாவீரர் நாளுக்கு தீபம் ஏத்த விட்டுக்குத்திருக்கு கண்டியளோ'

## 20,000 குடும்பங்களையே பராமரிப்பதற்கு இயலும்!

மழைநிலை தொடர்ந்தால் கைமீறும் ஆபத்து
இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ்ப்பாணத்தில் 20 ஆயிரம் குடும்பங்களைப் பராமரிப்பதற்குரிய சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன. எனவே, வெள்ளப் பேரிடர் நிலை கைமீறுகின்றபோது அதனால் ஏற்படும் பாதிப்புகள் மிகையாக இருக்கும் என்றும் யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத் ☞11

## கல்லடைசலால் பாதிக்கப்பட்ட பெண்ணை மீட்டெடுப்பது யார்?

போக்குவரத்து இன்றி அனலைதீவில் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28
கல்லடைசல் காரணமாக அனலைதீவைச் சேர்ந்த பெண்ணொருவர் யாழ்ப்பாணம் போதனாவுக்கு மாற்றப்படவேண்டிய தேவை உள்ள நிலையில், அவர் போக்குவரத்துப் பிரச்சினைகளால் அந்தரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவக் குழுக்கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம் ☞12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனப் பேழைகளுக்குக் கண்ணீர்க் காணிக்கை



கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம்





சாட்டி மாவீரர் துயிலும் இல்லம்



வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்



வவுனியா - ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்





வவுனியா நகரசபை (வவு. பிரஜைகள் குழு)



விசுவமடு - தேராவில் மாவீரர் துயிலும் இல்லம்



பருத்தித்துறை - சுப்பர்மடம் மாவீரர் துயிலும் இல்லம்



மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லம்



கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள இடர் நிலைக்கு உதவிகள் வழங்கலாம்

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.28

வெள்ள இடர்நிலைமையின்போது தன்னார்வமாக உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் அந்தந்த மாவட்டச் செயலகங்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்க முடியுமென வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார். நேரடியாகச் சில நிறுவனங்கள் உதவிகளை வழங்குவதால் ஒரே தரப்பினரே அவற்றை மீளவும் பெறும் வாய்ப்புள்ளதாகச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் மாவட்டச் செயலகங்களுடன் ஒருங்கிணைந்து இதனை முன்னெடுப்பதன் ஊடாக வினைத்திறனாக மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ரி66)




**ப**ருவத்தே பயிர் செய்யிற மாதிரி பருவத்தே பரீட்சையளையும் வைக்கிறதுதான் திறமாயிருக்கும். என்னதான் எங்கட கல்வித் திட்டத்தில கனக்க ஓட்டை உடைசல்கள் இருந்தாலும், கொரோனவுக்கு முதல் எக்ஸாம் வைக்கிற காலம் எல்லாருக்கும் பொருத்தமா இருந்தது. ஓகஸ்ட்டில ஏ.எல். எக்ஸாம், டிசெம்பரில் ஓ.எல். எக்ஸாம் எண்டது எல்லாருக்கும் மனப் பாடமா இருந்தது. அந்தக் காலங்களில பெரிசா காலநிலையிலையும் மாற்றம் இருக்காது. டிசெம்பரில மட்டும் சிலவேளை மழை இருந்தாலும், பத்து நாள் தான் எக்ஸாம் நடக்குமெண்டதால பெரிசா தாக்கம் இருக்கிறேலை. ஆனால் இப்ப எந்த எக்ஸாமை என்ன மாதத்தில வைக்கப்போயினமெண்டு மூக்குச் சாத்திரம் தான் பாக்கோணும்.அந்தளவுக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாதத்தில எக்ஸாமை வைச்சு எல்லாரையும் குழப்புகினம்.

இந்தமுறை போன 25 ஆம் திகதி ஏ.எல். எக்ஸாம் தொடங்கினது. அந்த எக்ஸாம் வரமுதலே, வடக்கு, கிழக்கில கடும் மழை பெய்யப்போகுது, வெள்ளம் வரப்போகுது, சிலவேளை புயலும் அடிக்கப்போகுது எண்டு வானிலை அறிவிப்புகள் வரிசையா வரத் தொடங்கிட்டுது. இதுவே வெளிநாடுகளா இருந்தால் 'எக்ஸாமாவது மண்ணாங்கட்டியாவது' எண்டு அதைக் கான்சல் பண்ணி, பிறகொருநாள் வைச்சிருப்பினம். ஆனால் எங்கட ஆக்கள் அடாது மழை பெய்ஞ்சாலும் விடாமல் எக்ஸாமை வைச்சே தீருவம் எண்ட அழுங்குப்பிடியில நிக்கினம். அவைக்கென்ன, வடிவா ஏசி ரூமுக்குள்ள இருந்து கொண்டு, வெளியில எட்டிப் பாக்காமல் என்ன முடிவும் எடுப்பினம். ஆனால் பாதிக்கப்படுறது அப்பாவிப் பிள்ளையளெல்லோ.

முந்தநாள் வடக்கில கடும் மழை. ஒரு பக்கம் காத்து, இன்னொரு பக்கம் மழை எண்டு சுழண்டு சுழண்டு அடிக்க அதுக்குள்ளையும் பிள்ளையள் போய் எக்ஸாம் எழுதிப்போட்டு வாறதைப் பாக்க வயிறு பத்தியெரியுது. இப்பிடிப் பிள்ளையளை வதைச்சு எக்ஸாம் வைச்சால், அதுகள் என்னெண்டு படிக்க ஏலும்? சொன்னாப் போல, அண்டைக்கொரு பொம்பிளைப்பிள்ளை வீட்டுக்குள்ள வெள்ளம் பூந்திட்டுது. அதுக்குள்ள அந்தப் பிள்ளை எக்ஸாமுக்கு போட வைச்சிருந்த உடுப்பெல்லாம் வெள்ளத்துக்க நனைஞ்சு கடும் ஈரம். அக்கம் பக்கத்தில இந்தப் பிள்ளைக்குத் தோதான உடுப்பு போடுற பிள்ளையளும் இல்லை. அப்பிடி இருந்தால் அவையிட்டயாவது வாங்கிப் போட்டுக்கொண்டு போயிருக்கலாம். பிறகு அந்தப்பிள்ளை ஈர உடுப்போட போய்த்தான் எக்ஸாம் எழுதிப்போட்டு வந்ததாம். இனிமேலாவது இப்பிடி பிள்ளையளை வதைக்காமல் காலநேரம் பார்த்து எக்ஸாமை வைக்கிறதுக்கு உரியவை நடவடிக்கை எடுக்கோணும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

# அதிகாரிகளின் விடுமுறை இரத்து

கொழும்பு, நவ. 28

நிலவும் கடும் மழையுடனான வானிலை காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தமது பணியிடங்களில் இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது விடுமுறை கோரியுள்ள அதிகாரிகளின் விடுமுறை இரத்துச் செய்யப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொத்மலை நீர்த்தேக்கம் 3 வான்கதவுகள் திறப்பு

மன்னார், நவ. 28

மத்திய மலைநாட்டில் பெய்துவரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் 3 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

2 வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் நேற்று அதிகாலை மேலும் ஒரு வான்கதவு திறக்கப்பட்டது. அத்தோடு, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது. (ச-இ)



# கொழும்புப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு !

கொழும்பு, நவ. 28

களனி ஆற்றின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் கொழும்பு உட்பட சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கை அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

சீதாவாக்கை, தொம்பே, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவ, கொழும்பு மற்றும் வத்தளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கே வெள்ளப்பெருக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கட்டம் கட்டமாகவே வாகன இறக்குமதி

கொழும்பு, நவ.28

வாகன இறக்குமதி கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜெயந்த தெரிவித்துள்ளார். வர்த்தக நோக்கில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அந்நியச்செலாவணி இருப்பை வைத்தே வாகன இறக்குமதி தீர்மானிக்கப்படும். தற்போது 6.4 பில்லியன் டொலர் மத்திய வங்கியிடம் கையிருப்பிலுள்ளது. பொருளாதார ஸ்திரத்தன்மையை வைத்தே வாகன இறக்குமதி தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-45-6)

# இலங்கையின் பாக்கு; இந்தியா சிவப்புக்கொடி

கொழும்பு, நவ.28

இலங்கையிடமிருந்து பாக்கு இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது.

இலங்கையிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பாக்கு தரமற்றதாகக் காணப்படுவதாக இந்திய உணவுத் தரக் கட்டுப்பாட்டு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி பாக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் இந்திய உணவுத் தரக் கட்டுப்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் பாக்கு இறக்குமதித் தடை காரணமாக வடபகுதி பாக்கு உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, வடபகுதியிலிருந்து பெருமளவு பாக்கு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதுடன் விவசாயத் திணைக்களத்தால் ஏற்றுமதி [illegible] வகைப்படுத்தப்பட்டுள்ளது. (ச-45-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சிறுசிறு தடைகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கடகம்:** தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** ஆதாயம் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன் வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



## காற்றுடனான மழையால் வேரோடு சாய்ந்தது மரம்

யாழ்ப்பாணம், நவ.28

வடமராட்சி, பருத்தித்துறை அல்வாய் பகுதியில் வீதியோரமாக இருந்த மரம் ஒன்று பலத்த காற்றுக் காரணமாக வேரோடு பாறி விழுந்ததனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக கனமழை பெய்து வரும் நிலையில், வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு பரவலாக பலத்த காற்றுடன் மழை பெய்தது.

இதன்போது அல்வாய் வீரபத்திரர் கோவிலுக்கு முன்பாக நின்ற மரம் ஒன்று வேரோடு சாய்ந்து வீதியின் குறுக்கே பாறி விழுந்தது. இதன் காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து செயலாளர் சி.சத்தியசீலன் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல்களை வழங்கி குறித்த மரத்தை அகற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டார். (ச-100)

## வெள்ளத்தால் பயிர்கள் சேதம்

யாழ்ப்பாணம், நவ.28

மழையால் யாழ்.குடாநாட்டு வயல்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிப் பாதிக்கப்பட்டதோடு, விவசாயிகள் மேற்கொண்ட மரக்கறிப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ரி-45-17)




## எலிக்காய்ச்சல் நோய்க்கு தடுப்பு மருந்துகள் பெறுக

முல்லைத்தீவு, நவ, 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய்ப் பரம்பல் அதிகரித்து வரும் நிலையில் சுகாதாரத் திணைக்களத்தினால் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வயல்களிலும், சேற்றுநிலங்களிலும் அதிக நேரம் வேலைசெய்யும் விவசாயிகள் இந்த நோயால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் காணப்படுகிறது.

அந்தவகையில் பிரதேசத்திலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் அல்லது பகுதி சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்

மாந்தை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர். (ச-25, 9)

## அனர்த்தமெனில் அறிவியுங்கள்

கொழும்பு, நவ. 28

நிலவும் சீரற்ற காலநிலையினால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பில் பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் வசதியாக பொலிஸ் தலைமையகத்தில் 24 மணி நேர விசேட செயற்பாட்டுமையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பொதுமக்கள் 0112 027 148, 0112 472 757, 0112 430 912 மற்றும் 0112 013 051 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும், '[email protected]' என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ச-இ)

## பச்சிலைப்பள்ளியில் 333 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ, 28

சீரற்ற காலநிலையால் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் நேற்றுப்புதன்கிழமை நண்பகல் வரை 103 குடும்பங்களைச் சேர்ந்த 333 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இரு வீடுகள் பகுதியளவிலும் 19 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

கோவில்வயல், தம்பகாமம், முகாவில், வேம்பொடுகேணி, புலோப்பளை மேற்கு, சோரன்பற்று, பளை நகரம், கச்சார்வெளி, முகமாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள் எனவும் அவர்களுக்கு நிவாரண உதவிப் பொருள்கள் விநியோகம் இடம் பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## இடர் உணர்ந்து உதவிடுக!

வடக்கு - கிழக்கில் கடந்த சில நாள்களாகக் கொட்டித் தீர்க்கும் மழையால் பெரும் வெள்ள இடர் ஏற்பட்டிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டுப் பாதுகாப்பானபகுதிகளுக்கு வெளியேற வேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இன்னமும் கனமழை தொடரும் நிலையில், இந்த இடர் நிலைமை இன்னமும் தீவிரமாகும் என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இந்நாள்களில் வடக்கு - கிழக்கு கனமழை வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிடும் என்று எதிர்வுகூறப்பட்டிருந்த போதும், இந்தளவு தாக்கத்தை அது ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. வடக்கு - கிழக்கில் கனமழையை வாரிக்கொண்டும் தாழமுக்கம் மிக மெதுவாக நகர்ந்து செல்வதால் எதிர்பார்க்கப்பட்ட மழைவீழ்ச்சியை விடவும், பலமடங்கு மழைவீழ்ச்சியைவடக்கும்-கிழக்கும்தாங்கவேண்டியிருக்கின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் தாழ்நிலப்பகுதிகள் இப்போது வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. வன்னிப் பெருநிலப் பரப்பில் பல குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரம் சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயக் கட்டத்தில் இருக்கின்றன. கனமழை தற்போதுவரையில் தொடரும் நிலையில் தேங்கும் வெள்ளத்தின் அளவு அதிகரித்துள்ளது. பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கிப் போக்குவரத்துத் தடைப்பட்டிருக்கும் நிலையில், வீடுகளுக்குள் வெள்ளம்புகுந்ததால் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரும் மக்களை அனைத்து இடங்களிலும் காணக் கூடியதாக இருக்கின்றது.

எதிர்பாராது ஏற்பட்டிருக்கும் இந்த வெள்ள இடர் பலரைப் பாதித்திருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர உதவிகள் வழங்கப்படுவது இப்போதுள்ள முதன்மைத் தேவையாக இருக்கின்றது. வெள்ள இடரைச் சமாளிப்பதற்கான முன்னாய்த்தங்களை அரசநிர்வாகம் செய்திருந்தபோதும், எதிர்பாராத வகையில் பலமடங்கு அதிகரிப்புடன் ஏற்பட்டிருக்கும் இந்த இடர் அதிகாரிகளையும் திக்குமுக்காடச் செய்திருக்கின்றது. ஆனாலும் அவர்களும் தங்களால் இயன்ற அவசர உதவிகளை வழங்குகின்றனர். ஆனால் அரசாங்கத்தையும், அதிகாரிகளையும் மட்டும் எதிர்பார்த்திருக்காமல் அவலத்தில் சிக்கியிருப்பவர்களுக்கு அனைவரும் கைகொடுக்க முன்வரவேண்டும். தற்போது தன்னார்வமாக தனிநபர்களும், அமைப்புகளும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க ஆரம்பித்திருக்கின்றனர். அவ்வாறு வழங்கப்படும் உதவிகள் ஒரே தரப்புகக்கு அல்லது ஒரே இடத்துக்குச் சென்றடைவதைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் அவை கிடைப்பதற்குரிய வழிவகைகளை மேற்கொள்வது சிறப்பானது. வடக்கு மாகாண ஆளுநரும் இதைக் குறிப்பிட்டு, மாவட்டச் செயலகங்களுடன் இணைந்து இந்த உதவிகளை வழங்குவது நன்மை பயக்கும் என்று தெரிவித்திருக்கின்றார். அதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இப்போதுள்ள இடர்மிகுந்த சூழ்நிலையில், பேதங்களை மறந்து செயற்பட வேண்டியது அனைவர் முன்பும் உள்ள கடமை. ஒருவருக்கொருவர் நாம் கைகொடுத்து உதவினாலே இந்த இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ளமுடியும். எம் அயலில் உள்ள பாதிப்புக்குள்ளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தங்களால் ஆன உதவிகளைச் செய்ய ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். தற்போதுள்ள இடர் நிலைமையை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.

– ஸ்டோலிங் மோர்ட்டன்–




## நாடாளுமன்ற அமர்வு காணொலியாக்கத் தடை

யாழ்ப்பாணம், நவ.28

**நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் கைபேசியில் ஒளிப்பதிவு செய்யவோ நேரலையாக ஒளிபரப்பவோமுடியாது என சட்டம் கொண்டு வரப்போவதாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ரொஷானி குணதீர தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா நாடாளுமன்ற முதல் நாள் அமர்வின் போது நடந்து கொண்ட விதம் பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின் பிரகாரம் நாடாளுமன்ற நடவடிக்கைகளை கைபேசியில் ஒளிப்பதிவு செய்வதோ நேரலையாக ஒளிபரப்புவதோ பொருத்தமற்றது என்ற விடயம் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை கைபேசியில் ஒளிப்பதிவு செய்வதோ நேரலையாக ஒளிபரப்புவதோ தடை செய்யப்பட்டுள்ளது என திருத்தம் கொண்டு வரவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## கல்விச் சீர்திருத்தத்தில் ரியூசன் தடைப்படாது

கொழும்பு, நவ.28

ரியூசனை தடை செய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கல்விச்சீர்திருத்தத்தை மேற்கொள்ளப்போவதாக நாங்கள் அறிவித்தோம், பரீட்சை முறைமையிலேயே மாற்றங்களை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளோம், என்ன விதமான திருத்தங்கள் மேற்கொள்வதாக இருந்தாலும் சகல தரப்புகளுடனும் கலந்துரையாடிய பின்னரே திருத்தங்களை நடைமுறைப்படுத்துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

## பெருக்கெடுக்கும் நீர்த்தேக்கங்கள்

நாட்டின் பல நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதாகவும் பெரும்பாலான ஆறுகள் பெருக்கெடுத்து வருவதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நேற்றுக் காலை நிலைவரப்படி தெதுரு ஓயா நீர்த்தேக்கத்துற்கு வினாடிக்கு 32,145 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அதேவேளை, ராஜாங்கனை நீர்த்தேக்கம், யான் ஓயா நீர்த்தேக்கங்களிலும் நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதேவேளை, மகாவலி ஆற்றின் தாழ்வான பகுதிகளிலும் வெள்ள இடர் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பாதிப்பெனில் 107 க்கு தமிழில் அழைக்குக

கொழும்பு, நவ. 28

நிலவும் அசாதாரண காலநிலையின் பாதிப்புகள் குறித்து தமிழ் மொழி மூலம் அறிவிக்கவும், அவசர ஒத்துழைப்புகளைக் கோரவும் 107 என்ற விசேட அவசர அழைப்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச)



## மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள்

கொழும்பு, நவ. 28

சீரற்ற காலநிலை காரணமாக மலையக மற்றும் மட்டக்களப்புக்கான ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மட்டக்களப்பு மார்க்கத்தில் பொலநறுவை வரையிலான ரயில் போக்குவரத்தை மட்டுப்படுத்தவும் நானுஓயா வரையிலான மலையகப் பாதையில் ரயில் போக்குவரத்தை மட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

நாளை

வெள்ளிக்கிழமை - கார்த்திகை - 14

29.11.2024

சுபநேரம் : 06.13 - 07.43

ராகுகாலம் : 10.43 -12.13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றத்துக்கு நீதி: சீனாவே தடுக்கின்றது!

## காணாமலாக்கபட்டோரின் சங்கம் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், நவ.28**

**வடக்கு - கிழக்கில் இறுதிப் போரின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என உறவுகள் ஏங்கி கொண்டிருக்கும் நிலையில் அதற்கான சர்வதேச நீதியைப் பெறுவதற்கு சீனா தடையாக அமைகின்றது என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கபட்டோர் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.**


அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தந்த சீன தூதுவர் தமிழ்மக்களின் தீர்வு மற்றும் காணமாலாக்கப்பட்டோர் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு வழங்கிய பதில் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய மக்கள் சக்திக்கு வாக்கு கிடைத்தது உண்மை. ஆனால் அநுரகுமார அரசாங்கத்தை முற்று முழுதாக ஏற்றுகொண்டு வாக்களிக்கப்பட்டது என்று கூறமுடியாது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெறுப்பே அங்கு வாக்காக அளிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்ற விசாரணைக்காக கடந்த அரசாங்கங்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு பல நாடுகள் தயாராக இருந்தும் சீனாவுக்கு அங்குள்ள வீற்றோ பவர் காரணமாக இந்த விடயம் தடுக்கப்படுகின்றது. காணாமலாக்கபட்டவரின் பிரச்சினையைக் கொண்டு சென்றால் சீனா இலங்கைக்கு ஆதரவாக வீற்றோ அதிகாரத்தை பாவிக்கும் என்கின்றார்கள்.

அதேபோல இறுதிக்கட்டப் போரின் போது சீனா பொஸ்பரஸ் குண்டுகளைக் கொடுத்து தமிழ் மக்களைக் கொல்வதற்கு உதவியுள்ளனர்.

எனவே எமது பிரச்சினைக்கான தீர்வை தடுப்பதற்கு முன்நிற்கும் சீனாவின் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்- என்றார். (ச-125,27)



# சூறாவளி எச்சரிக்கை மீனவர்கள் 'அலேர்ட்'

யாழ்ப்பாணம், நவ.28

சீரற்ற காலநிலை காரணமாக சூறாவளி அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் வடமராட்சி கடற்கரையோரங்களில் உள்ள மீனவர்கள் தமது கடற்றொழில் உபகரணங்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றி வருகின்றனர்.

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த தினங்களாக தொடர்ச்சியான மழை பெய்து வரும் நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. கடற்பிரதேசம் மிகுந்த கொந்ளிப்புடன் காணப்படுகின்றது.

இதன் காரணமாக ன் கடற்கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் இழுக்கப்பட்டு கரையில் மேல்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டும் படகின் வெளியிணைப்பு இயந்திரங்கள் உள்ளிட்ட பெறுமதிமக்க கடற்றொழில் உபகரணங்கள் கரை பகுதியில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் நடவடிக்கையில் மீனவர்கள் கடும் மழைக்கு மத்தியிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ச-100)



# மக்களை மீட்பதற்கு ஹெலிகள் தயார்!

யாழ்ப்பாணம், நவ. 28

அடைமழை காரணமாக அவசர காலங்களில் மக்களை மீட்க 6 ஹெலிகொப்டர்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பலாலி, இரத்மலானை, ஹிகுராக்கொட, , வீரவில, அம்பாறை, அனுராதபுரம் விமானப்படை தளங்களில் ஹெலிகொப்டர்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் கிகனகே தெரிவித்தார்.

மேலும், அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக விசேட பயிற்சி பெற்ற விமானப்படை படைப்பிரிவின் விசேட அதிரடிப்படையினர் தயார்படுத்தப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச)

# கெருடாவிலில் மரம் சாய்ந்தது

யாழ்ப்பாணம், நவ.28

சூறாவளி அபாய நிலையை தொடர்ந்து வடமராட்சி உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்று வீசி வரும் நிலையில் கெருடாவில் பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலையில் காற்றின் கோரத்தில் சிக்கிய மரம் ஒன்ற வேரோடு சாய்ந்துள்ளது.

இதனால் மின் கம்பிகள் அறுந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனர்த்தம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விரைந்து நடவடிக்கை எடுத்தனர். (ச-100)



# கடும் கொந்தளிப்பில் முல்லைத்தீவுக் கடல்

முல்லைத்தீவு, நவ. 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடல் என்றுமில்லாதவாறு கொந்தளிப்பு நிலைமையுடன் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் கிழக்கில் இருந்த காற்றமுத்த தாழ்வு நிலை தற்போது புயலாக மாறி வடக்கை நோக்கி நகர்ந்து வருவதையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாக்கெணை, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு கடல்பரப்புகள் என்றுமில்லாதவாறு கடும் கொந்தளிப்பாக காணப்படுகிறது. (ச-இ)

# 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 28

நாட்டின் 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் 3 மாவட்டங்களுக்கு மூன்றாம் நிலை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கண்டி, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மூன்றாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாண பல்கலைக்கழகம்


உதயன் பணிமனை

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 28.11.2024 தொடக்கம் 11.12.2024 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 12.12.2024 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 12.12.2024 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| கீழ்தரை | | | | |
| 1. | PMS-01 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 2. | PMS-02 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 3. | PMS-03 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 4. | PMS-04 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 5. | PMS-05 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| 6. | PMS-06 | 1,920,000.00 | 28,800.00 | 2,000.00 |
| மேற்தரை | | | | |
| 7. | PMS-07 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 8. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 9. | PMS-09 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 10. | PMS-10 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 11. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 12. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

**நியந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 12.12.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்தகாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரும்தி த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

28.11.2024.


தியாக தீபம் திலீபன் நினைவாலயம்

# கிளிநொச்சி மக்கள் முகாம்களில் தஞ்சம்


கிளிநொச்சி, நவ.28

சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் ஆயிரத்து 43 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 524 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பலரது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பல விவசாய நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

அதேவேளை வட்டக்கச்சி ஊடாக கண்டாவளை செல்லும் பிர தான வீதியில் புளியம்பொக்கணைப் பகுதியில் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதனால் பெரியகுளம், வட்டக்கச்சி செல்லும் வீதி முற்றாகத் தடைப்பட்டுள்ளது. (ச-113)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 08 . 1942 | 27 . 11 . 2024 |

## சிவலிங்கம் சரஸ்வதி

காரைநகர் மானிடல் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், ASC முன்பாக உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சரஸ்வதி அவர்கள் நேற்று (27.11.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னரியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் (பிரபல வர்த்தகர் - கிராண்பாஸ், கொழும்பு) அன்பு மனைவியும், சிவனேஸ்வரி, தவராசா (கணக்கீட்டு ஆசிரியர் S.தவா - யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்), சிவரஞ்ஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் ஜெயமாலினி, சிவநாதன் (நாதன் அரைக்கும் ஆலை, உடையார்கட்டு) ஆகியோரின் அன்பு மாமியும், கணநாதன் (கொமர்ஷல் வங்கி, வவுனியா), சாம்பவி (கிராம அலுவலர் J/105), கஸ்தூரி, கணபாலன், பாலகீர்த்தனா, கஜன், ரஜீவன், ரதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவாந், சங்கவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடையார்கட்டு வடக்கு வெள்ளப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

**சி.சிவனேஸ்வரி - 077 119 3421**
**சி.தவராசா - 077 239 5858**
**சி.சிவரஞ்ஜினி - 077 941 8347**

**உடையார்கட்டு வடக்கு,**
**உடையார்கட்டு**

(CS/29297) J-1

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 02 . 1950 | 24 . 11 . 2024 |

## இந்திராணி கந்தையா

யாழ்ப்பாணம் சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி கந்தையா அவர்கள் கடந்த 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் இளைய மகளும், செல்வராணி, புஸ்பராணி (இலங்கை), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவச்செல்வம், மதிவதனி, காலஞ்சென்ற இராஜகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரகஸ்பதி (பவன் - ஜேர்மனி) அவர்களின் அன்புச் சிறியதாயாரும், சைலஜா, சாளினி, சிவசன், சதீசன், மயூரன் ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், ரூபரேகா, ஸ்ரீகோபிநாத், காலஞ்சென்ற சசிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவஜா-கஜேந்திரன், நிருஜா விஷ்னு ஆகியோரின் அன்பு அத்தையும், கோபிகா – ஜங்கரன், கார்த்திகா - அனுஷன், கீர்த்தனா - சாணுஜன் பிரவீனா, நருசனன், கவீனா, சஜீத், அபிஷயன், ஜதுயன், ருத்திரன், சிரிஜா, லிஜனா, தாரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னாங்கன்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

**சிவசன் - பெறாமகன் - +94 771 220 645**
**ரூபா - மருமகள் - +49 157 304 50461**

(CS/29294) J-1

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 02 . 1942 | 27 . 11 . 2024 |

## செல்லத்துரை கந்தசாமி

பெரியபளை, பளையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கந்தசாமி அவர்கள் நேற்று (27.11.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை கனகம்மா தம்பதியரின் மூத்த மகனும், மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கணகாம்பிகை, அனுசாம்பிகை மற்றும் ஜபேசன் (பளை அஞ்சல் அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வர்ணலட்சுமி மற்றும் சரஸ்வதி, சிவபாக்கியம், கனகசபை (பூசகர், பளை இரட்டைக்கேணி அம்மன் ஆலயம்), சிவஞானம் (பூசகர், பெரியபளை பத்திரகாளி அம்மன் ஆலயம்) ஆகியோரின் சகோதரனும், சிறீதரன், செல்வராசா, தர்மினி (ஆசிரியர், கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், திவாகரன், ரம்சி, வேணுயன், மதுயன், ஆரபி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2024) வியாழக்கிழமை முற் பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தம்பகாமம் மலயான்காடு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக் காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெரியபளை, பளை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 04 . 1972 | 23 . 11 . 2024 |

## சுப்பிரமணியம் மணிசேகரன் (சேகர்)

கொடிகாமம் மடத்தடி வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது சுவிற்சலாந்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மணிசேகரன் கடந்த 23.11.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் ஆருயிர் மகனும், காலஞ்சென்ற மணிபத்மன் மற்றும் மணிவண்ணன் (இலண்டன்) மணிவதனி (யா/வரணி ம.க.), காலஞ்சென்ற மணிதரன் (மதன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுமதியின் (இலண்டன்) மைத்துனரும், துவாரகனின் ஆசைச் சித்தப்பாவும், காலஞ்சென்ற நடராசா மற்றும் - குணமணி, காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் - சரஸ்வதி, கந்தசாமி-பாலகுமாரி தம்பதியரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2024) வெள்ளிக்கிழமை சுவிற்சலாந்தில் Chapelle funeraire, Route de Chantemerle, 37 a - 1763 Granges - paccot இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 43791) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தத்துக்கு இணங்கியது இஸ்ரேல்!

## இன்றுமுதல் லெபனானில் அமைதி

**வொஷிங்டன், நவ. 28**

**மத்திய கிழக்கில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இஸ்ரேல் ஹிஸ்புல்லா இடையிலான மோதல், இன்றுடன் முடிவுக்கு வருகின்றது என்று அமெரிக்க அதிபர் பைடன் அறிவித்துள்ளார்.**

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த அமைதிப் பேச்சுகள் வெற்றியளித்துள்ளன என்றும், இதன் தொடர்ச்சியாகவே போர் நிறுத்தம் இன்று முதல் உடனடியாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்றும் பைடன் கூறியுள்ளார்.

இந்தச் செய்தியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த 14 மாதங்களாக இடம்பெற்றுவந்த தொடர்ச்சியான மோதல்கள் முடிவுக்கு வந்துள்ளன. எமது மத்தியஸ்தத்தை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். நாளை முதல் (இன்று) லெபனானுக்குள் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்காது என்று பைடன் அறிவித்துள்ளார். இஸ்ரேல் மற்றும் லெபனான் மக்களுக்கான நீடித்த பாதுகாப்பை போர்க் களத்தில் கண்டுகொள்ள முடியாது என்பதே உண்மை. இதை இரண்டு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விரைவாக அடுத்த கட்டத்துக்குப் பயணப்படவேண்டிய நேரம் இது என்றும் பைடன் தெரிவித்துள்ளார். எனினும், ஹமாஸ் அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்பிலும் அந்தப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படுமா என்பது தொடர்பிலும் பைடன் எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## அமெரிக்காத் தளங்கள் மீது ஈராக்கில் தீவிர தாக்குதல்

பக்தாத், நவ. 28

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை இலக்குவைத்து ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் விமான நிலையத்துக்கு அருகேயுள்ள அமெரிக்க இராணுவத் தளத்தையும், பக்தாத்தின் மத்திய பகுதியில் உள்ள இராணுவத் தளத்தையும் இலக்குவைத்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

எனினும், தாக்குதலால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்றும், ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்பட்டுள்ளன என்றும் அமெரிக்க பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. காஸா மோதல்களுக்குப் பின்னர், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் இலக்குவைக்கப்படுகின்றமை மிகையாக அதிகரித்துள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாகவே இந்தத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், ஹிஸ்புல்லாவின் ஆதரவுடன் இயங்கிவரும் துணை இராணுவக் குழுக்களே இந்தத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக அமெரிக்கா சந்தேகம் வெளியிட்டுள்ளது. (ம)

## அதானியின் ஊழல்களுக்கு உடன் விசாரணை தேவை!

### இந்திய மக்களவையில் போர்

அதானியின் ஊழல் மோசடிகள் தொடர்பில் விவாதிக்கவேண்டும் என்று வலியுறுத்தி இந்திய மக்களவையில் நேற்று எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டுள்ளன.

நாடாளுமன்றத்தின் வழமையான கேள்வி நேரத்தை ஒதுக்கி, அதானியின் ஊழல் மோசடிகள் தொடர்பில் விவாதிக்குமாறே எதிர்க்கட்சிகள் நீண்டநாள்களாக வலியுறுத்துகின்றன. நேற்றும் அந்தப் போராட்டங்கள் தொடர்ந்த நிலையில், மக்களவை அமர்வு இன்றைய நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மக்களவையில் மாத்திரமல்லாமல், மாநிலங்கள் அவையிலும் அதானி குழுமத்தின் ஊழல் மோசடிகள் எதிரொலித்துள்ளன. சபையைக் கொண்டு நடத்த முடியாததால் மாநிலங்கள் அவையையும் ஒத்திவைப்பதாக குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் அறிவித்துள்ளார். அதானி குழுமத்தின் மீதான பல்லாயிரம் கோடி ஊழல் முறைப்பாடுகள் பாரதூரமானவை. அவை அவசரமாக விவாதிக்கப்பட வேண்டியவை. சபை ஒழுங்குமுறை என்பதைக் காரணம் காட்டி இந்த விடயத்தை நீர்த்துப்போகச்செய்யவே ஆளும் கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று காங்கிஸ் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரிட்டன் அதிகாரியை வெளியேற்றியது ரஷ்யா

### தூதரக உறவுகள் குழப்பநிலை

பிரிட்டன் தூதரக அதிகாரி ஒருவர், ரஷ்யாவை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளார்.

எட்வர்ட் பிரையர் என்ற தூதரக அதிகாரியே இவ்வாறு ரஷ்யாவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். அவர் எவ்வாறான உளவு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற விடயங்களை ரஷ்யா வெளிப்படுத்தவில்லை. மாறாக, ரஷ்யாவுக்குப் பெரும் சேதாரங்களை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான தூதரக அதிகாரியாகச் செயற்படுவதற்காக அவரால் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் போலியானவை என்றும், அவர் ஒரு நாட்டின் தூதராகச் செயற்படுவதற்கு இருந்த குறைந்தபட்சத் தகுதிகளைக்கூட இழந்துள்ளார் என்றும் ரஷ்யா தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் குற்றச்சாட்டுகளுக்கு பிரிட்டன் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஆனால், ரஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால முரண்பாடுகளின் விளைவாகவே தூதரக அதிகாரியின் வெளியேற்றம் அமைந்துள்ளதாக பிரிட்டன் ஊடகங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன. (ம)



## அர்ப்பணிப்புடனான பணி இனியும் தொடரவேண்டும்

உதயன் பத்திரிகை தனது 39ஆவது ஆண்டு நிறைவை எட்டியுள்ளதை முன்னிட்டு இந்தியத் துணைத்தூதரகம் சார்பாக இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வடக்கு மாகாண மக்களின் குரலாக இருந்து வருகின்ற உதயன், இடர் மிகுந்த காலங்களிலும் கூட ஜனநாயகத்தைக் காப்பாற்றும் தனது ஊடகப் பணியைத் திறம்பட ஆற்றி வந்திருப்பது பாராட்டுக்குரியது. பல சோதனைக் காலங்களை கடந்து, பல ஊடகவியலாளர்களின் அர்ப்பணிப்புடன் ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாகிய ஊடகத் துறையை காப்பதற்காக உழைத்த அனைத்து 'உதயன்' ஊடகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுகளும், வாழ்த்துகளும் உரித்தாகுக.

இலங்கையின் வடக்கு மாகாணத்தின் வளர்ச்சி மற்றும் மக்களின் நலன் என்பது எமக்கு மிகவும் முக்கியமானது. இந்தியாவால் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கலை கலாசாரம் தொடர்பிலான செய்திகளை மக்களுக்கு வழங்கிவருவதில் உதயன் என்றுமே தவறியதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதில் யாழ்ப்பாணத்தில் உதயன் ஆற்றிய பணிகள் அளப்பெரியன. இந்த விடயத்தில் இலக்கை நோக்கி உதயன் போன்ற ஊடகங்கள் தொடர்ந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்தியா மற்றும் இலங்கை இடையே உள்ள உறவுகள் வலுவடைந்து வருகின்றன. இந்த உறவை மேலும் வலுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. உதயன் போன்ற ஊடகங்கள் இவ்விடயத்தில் முன்னோடியாக விளங்கவேண்டும். உதயன் பத்திரிகைக்கு என்னுடைய வாழ்த்துகள். எதிர்வரும் காலங்களில் மேலும் பல சாதனைகளைப் புரிந்து தமிழ் மக்களின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**சாய் முரளி**
இந்தியத் துணைத் தூதுவர்
யாழ்ப்பாணம்



## சாதனைப் பயணத்தை தொடர்வான் உதயன்!

மக்கள் மனம் நிறைந்த நாளிதழாம் உதயன் பத்திரிகையின் நாற்பதாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மன மகிழ்வடைகின்றேன். ஊடக வரலாற்றில் நீண்ட பாரம்பரியம் கொண்டவன் உதயன். நீண்ட பயணத்தை சீரிய பாதையில் கொண்டு செல்வதிலும் உதயனுக்கு நிகர் உதயனே. 1985ஆம் ஆண்டு இந்தப் பத்திரிகை வெளிவந்த காலம்முதல் இன்றுவரை பலருக்கு உதயன் பத்திரிகையுடன் பொழுது விடிகின்றது என்பது நிதர்சனம்.

எமது பிரதேசத்தில் போர்மேகம் சூழ்ந்திருந்த காலப் பகுதியில், உதயன் பத்திரிகையின் தார்ப்பரியம் எல்லோராலும் உணரப்பட்டது. உதயன் பத்திரிகையின் ஒரு பிரதியாவது எமக்குக் கிடைக்காதா என்று தவமாய் தவமிருந்த காலப்பகுதி அது.

இன்று இலத்திரனியல் ஊடகங்கள் பெரும் சவாலாகத் திகழ்கின்றபோதிலும் உதயன் தொடர்ந்தும் தன் இருப்பை நிலைநிறுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது. இத்தகைய சிறப்புமிக்க உதயன் பத்திரிகை மேலும் வளர்ச்சிகண்டு வீறு நடைபோட்டு தன் சாதனைப் பயணத்தைத் தொடர வாழ்த்துகள்.

**ச.சிவஸ்ரீ**
பிரதேச செயலாளர்
வலிகாமம் கிழக்கு
கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பேரிடரால் தத்தளிக்கின்றது தாயகம்


நல்லூரில்.....







படங்கள் ஐ. சிவசாந்தன்






மட்டக்களப்பில்...







சம்மாந்துறையில்...





கல்முனைப் பாலம்...



செம்மணி வீதி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உதயனின் 40ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு, உதயன் பணிமனையில் நேற்றுக் குருதிக்கொடை முகாம் இடம்பெற்றது. கொட்டும் மழைக்கு மத்தியிலும் பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ம)

## வெள்ளத்தால்...

யாழ்ப்பாணத்தில் மட்டும் அண்ணளவாக 13 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 66 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு அவற்றில் ஆயிரத்து 634 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 793 பேர் இருத்தப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். பல இடங்களில்மரங்கள்முறிந்துவீழ்ந்துள்ளன. இதனால், போக்குவரத்து மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெருமளவான மக்கள் வீடுகளை விட்டு நேற்று இரவும் வெளியேற்றப்பட்ட நிலையில் அவர்களுக்குச் சமைத்த உணவுகள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வவுனியா**

வவுனியாவில் கடந்த 48 மணிநேரமாகப் பெய்துவரும் கன மழையால் ஆயிரத்து 48 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 492 பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். புளியங்குளம், கல்மடு, ஈச்சங்குளம், பாலமோட்டை, அக்கோபுர, புதுவிளாங்குளம், கந்தசாமிநகர், குருக்கள் புதுக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே மிகவும் அதிகமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். 48 குளங்கள் உடைப்பெடுத்துள்ள நிலையில், ஏனைய குளங்களும் வான் பாய ஆரம்பித்துள்ளன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 104 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 374 பேர் மிகையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். அத்துடன், முல்லைத்தீவு மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாக நேற்றுக் கைவிடப்பட்டன. எக்காரணம் கொண்டும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்ற அறிவுறுத்தல் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் மிகப்பெரும் பயிரழிவு ஏற்பட்டுள்ளதாகவும், குளங்கள் அனைத்தும் வான்பாய ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்தின் மேலும் ஆறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதையடுத்து பொதுமக்கள் தாழ்வான பகுதிகளில் இருக்கவேண்டாம் என்று உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மன்னார்**

மன்னாரில் ஆயிரத்து 800 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 884 பேர் 55 பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மல்வத்தோயாவில் இருந்து மன்னாருக்கு வருகைதரும் நீரின் அளவு அதிகமாக காணப்படுவதால் மன்னார் மாவட்டத்தில் முக்கியமான குளமாக காணப்படும் கட்டுக்கரைக் குளமும் நிரம்பி வழியத் தொடங்கி வான்பாய ஆரம்பித்துள்ளது. நானாட்டான் மற்றும் மடுக்கரை பகுதியிலுள்ள மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(அ-ம-26-125-66-60-110-113-20)

## 20,000...

தில் நேற்று இடம்பெற்ற இடர் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் மிகவும் அபாய நிலையில் காணப்படும் காரைநகர் சக்கலாவோடை, கொடிகாமம் நாவலடி, கல்லூண்டாய் வீட்டுத்திட்டம், மருதங்கேணி உட்பட சில இடங்களை பெயர் குறிப்பிட்டு, இது குறித்து அமைச்சருக்கு முறைப்பாடுகள் பொதுமக்கள் மூலம் அனுப்பப்பட்டிருக்கக்கூடும். நிதியின்மை மற்றும் பொதுமக்களிடத்தில் உள்ள புரிதலின்மை காரணமாகவே இவ்வாறான முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

இதுவரை 866 மில்லிமீற்றர் வரையிலான மழை வீழ்ச்சியைப் பெற்றுள்ளோம். புயலின் நகர்வுப் பாதைகள் மாறிக் கொண்டிருப்பதன் மூலம் காலநிலை குறித்த திடமான கருத்துகளைக் கூறமுடியாதுள்ளது. இருப்பினும் மழை வீழ்ச்சி 100 மில்லி மீற்றர் தொடக்கம் 150 மில்லி மீற்றர் வரை எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 24 மணித்தியாலத்தில் 250 மில்லிமீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவு செய்யபட்டுள்ளது. கடலின் மட்டம் 2 முதல் 3 அடிவரை உயர்ந்துள்ளது. 40 இடைத்தங்கல் முகாம்கள் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 105 வீடுகள் பகுதியளவிலும் 3 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

கடந்த நிஷாப்புயலின் போது 19 ஆயிரம் குடும்பங்களையே பராமரிக்க முடிந்தது. எம்மால் 20 ஆயிரம் குடும்பங்களைப் பராமரிக்கக்கூடிய நிலையே காணப்படுகின்றது. எனவே, வெள்ளப் பேரிடர் கைமீறினால் பாதிப்புகளும் அதிகரிக்கும். மரங்களை வெட்டி அகற்றுவதற்கு எம்மிடம் மூன்று இயந்திரங்களே காணப்பட்டன. இரண்டு பழுதடைந்துள்ள நிலையில், ஒன்றை வைத்தே பணிகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (அ-ம-125)

## தீவகக்...

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற்கொண்டு நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற பகுதிகளில் வசிக்கும் 36 வாரத்துக்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களையே இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அருகாக உள்ள பகுதிகளில் தங்க வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது உடனடியாகவோ அல்லது திடீர் பிரசவ வலி ஏற்பட்டோ சிசுவைப் பிரசவிக்கக்கூடிய வகையில் தீவகத்தில் எந்தவொரு கர்ப்பிணிப் பெண்ணும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## கல்லறை...

நாடெங்கும் அசாதாரணமான காலநிலை நிலவிவரும் நிலையிலும், மக்கள் குடும்பம் குடும்பமாக ஒன்றுதிரண்டு வித்தாகிப்போன தமது பிள்ளைகளின் - உறவுகளின் - சகோதரர்களின் பெயர்களைச் சொல்லிக் கதறியழுத காட்சிகள் இதயங்களை கனக்க வைத்தன.

தாயகத்தில் கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம், உடுத்துறை, சாட்டி, கனகபுரம், முல்லைத்தீவுக் கடற்கரை, இரட்டை வாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அலம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால், சுப்பர்மடம், ஆட்காட்டிவெளி ஆகிய பகுதிகளில் உள்ள துயிலுமில்லங்களில் சரியாக மாலை 06.05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது, 06.06 மணிக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது, 06.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது.

துயிலுமில்லங்களில் மாவீரர்களுக்கான 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே...' என்ற பாடல் ஒலிக்கவிடப்பட்டது. இந்தப் பாடலின் போது உறவுகள் மாவீரர்களை நினைத்து கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர். சுமார் 30க்கும் மேற்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

**(தொடர்புடைய படங்கள் பக்கம் 02)**

(அ-ம,26,125,20,113,110,66,18)

## மூன்று...

துண்டிக்கப்பட்டுள்ளது. எனினும், வடக்கு மாகாணத்துக்கு அடுத்த மூன்று நாள்களுக்குத் தேவையான அத்தியவசியப் பொருள்கள் இருப்பில் உள்ளன. வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் வான்பாய ஆரம்பித்துள்ளன. தீவகத்தில் உள்ள அவசர தேவைகருதிய நோயாளிகளை மீட்பதற்கு விமானப் படையின் சேவைகள் கோரப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125-26)

## பூசகரைத்...

சென்றுள்ளனர். நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பேருந்தொன்றில் வந்திறங்கிய இருவரே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். பூசகர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100)

## பருத்தித்துறை...

மழை பெய்துவரும் நிலையில் பருத்தித்துறை உள்ளிட்ட வடமராட்சி கடற்பிரதேசம் மிகுந்த கொந்தளிப்புடன் காணப்படுகிறது.

பருத்தித்துறை துறைமுக இறங்குதளம் அமைந்துள்ள பகுதியில் கடலலைகள் மோதி பல அடி உயரத்துக்கு மேலெழுந்து வருகிறது. இதன் காரணமாகவே குறித்த பகுதிக்கு பொதுமக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

## பாம்பு...

உள்ளாகியவர் உடனடியாக நெடுங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து வவுனியா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (அ-ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்நாளில் மகனுக்காக சுடரேற்றிய தந்தை இறப்பு!




முல்லைத்தீவு, நவ. 28
முல்லைத்தீவு- முள்ளிய வளை மாவீரர் துயிலும் இல்லத்தில் தனது மக னுக்காக சுடரேற்றி விட்டுச் சென்ற தந்தை, தனது வீட்டில் திடீர் சுக வீனத்தால் உயிரிழந் துள்ளார்.

கப்டன் இசைக்கலை ஞன் என்ற மாவீரரின் தந்தையான அமரசிங் கம் சண்முகலிங்கம் என் பவரே இவ்வாறு உயிரி ழந்தவராவார்.

(ம-19)





# தாவராவதானிப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.28
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு வருடந்தோறும் நடத்தும் தாவராவதானிப் போட்டி நிகழ்வு மழைக்கு மத்தியிலும் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சீரற்ற காலநிலையிலும் அதிக எண்ணிக்கையான ஆண், பெண் போட்டியாளர் கள் குறித்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். வெற்றியாளர்களுக்கு அடுத்த வரு டத்தின் ஆரம்பத்தில் நடைபெறவுள்ள பசுமை அமைதி விருதுகள் விழாவின் போது சான்றிதழ்களுடன் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ச-45-66)

## A/L - வரலாறு

யாழ் முதல் நிலை வரலாற்றாசிரியர்
M. பத்மன் [B.A (Hons) History, P.G.D.E, Dip. in.Psy M.A (Hons) History, M.E.D (OUSL)]

- 2 K 26, 2K 25 ற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- விடுமுறைக்கால விசேட வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

கற்பிக்கும் இடங்கள் • D. M. I ஆரியகுளம், யாழ்.நகர்.
•BITSMANS மானிப்பாய். •HIGH COLLEGE குளப்பிட்டி, கொக்குவில்.

T.P.: 077 482 5587

(cr.43788) (N -1)

## கல்லடசைலால்...


தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடற்பகுதியின் ஊடாகப் போக்குவரத்தை மேற் கொள்வதற்குச் சாத்தியமில்லை என்று கடற்ப டையினர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். விமானப்படைமூலமாகவே அந்தப்பெண்ணை மீட்கக்கூடிய நிலை காணப்படுகின்றது. எனி னும், தற்போது நிலவும் காலநிலையில் இது உயிராபத்தான விடயமாக அமையும் என்பதால் இந்த விடயத்தில் விமானி முடிவெடுத்தால் மாத் திரமே மீட்பு சாத்தியம் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

(அ-ம-125)

# மரண அறிவித்தல்

## இராசையா மகேஸ்வரலிங்கம்



பிறப்பு 03.10.1948 இறப்பு 26.11.2024

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேஸ்வரலிங்கம் நேற்றுமுன்தினம் (26.11.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், கிரிதரன், அனோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், நவீன், இமையான், றோசா, நோஆன் ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரலிங்கம், சிவஞானேஸ்வரலிங்கம், ஞானாம்பிகைதேவி (சுசி), காலஞ்சென்றவர்களான சண்முகேஸ்வரலிங்கம், கணேஸ்வரலிங்கம், தியாகேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசலிங்கம் (சின்னமணி), தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான லதா, சரஸ்வதிதேவி, சரஸ்வதி, சண்முகாதேவி, ஞானேஸ்வரதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவனொளிபாதம், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும், ஜனுஷாவின் அன்பு மாமனும், இராசலிங்கத்தின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2024) வியாழக் கிழமை உரும்பிராய் கிழக்கு, செல்லப்பா வீதியில் அவரது சகோதரியின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
Kiri (Son) + 4560 645 450
Sivam (Brother) +1514 448 6635
Ganeshalingam (Brother in law) +947 636 86510

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/29295) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.